



ஓலை 70 | ஓசை 193 | மே 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூறும் ஆக்கந் தரும்**

## பொருள்

**புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலைவிட, அவ்வாறு செய்யாமல், வறுமையுற்று இறந்துவிடுதல் அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.**


**அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய**

**9597887847**

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# குற்றெழுத்தாய்க் குறுகி விடாதே

பா வகை : சிந்து - ஆனந்த (இன்ப)க் களிப்பு

குற்றெழுத்தாய் வாழ்வில் குறுகலாமோ - கண்ணே
குற்றம் கண்டால் கொதிப்பாய் நெருப்பாய்
பெற்றிட்ட வாழ்வில் பிறழாமல் - நீயும்
பெருமைகளைச் சேர்பாய் பெரிதாய் நிலையாய்

அஞ்சாமல் துஞ்சாமல் ஆற்றிடுவாய் - கடமை
அடிபணியா துணிவாலே அளந்திடுவாய் உலகை
விஞ்சிடுமோர் உறுதி விரிக்கட்டும் - சிறகை
விடிவெள்ளி யாக மிளிரட்டும் பொற்கை

குறுகிவாழும் வாழ்க்கை குப்பைக்கு - நிகராம்
குமையாமல் நிமிர்ந்தால் குன்றாய் ஆகலாம்
வறுமைவந்த துணிவு வலிநிறைந்த - வாழ்வு
வழிதேடு நிமிர்ந்து வளமாகும் வாழ்வு

உளத்துள் குறைந்தா உயரம் - தொடுவாய்?
உன்னை இழந்தா உயிரை வளர்ப்பாய்?
அளித்து வாழ்ந்தால் அகத்துள் - வாழலாம்
அழித்து வாழ்ந்தால் அழுகி நாறலாம்

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# காகிதம்

அத்தனை
வெள்ளை
காகிதங்களும்
வியாபித்து
நீளுகின்றன

ஓரி காமி
உருவங்களில்
சிறகுகள்
உலர்த்துகின்றன

வண்ண வண்ண
சாயங்களில்
ஏதேதோ
நிரம்பி
வழிகின்றன

கால்களில்
சிக்கிய காகிதத்துடன்
பறக்கும்
மூக்கு நீண்ட
பறவை ஒன்று
எதையோ
ஞாபகப்படுத்த

குழந்தைக்கு
வேகவேகமாய்
காண்பிக்கிறேன்
ஆதிகால
தபால்காரரை

உறவுகளின்
உணர்வுகள்
பூட்டிய
வான வண்ணக்
காகிதம்

இப்போதெல்லாம்
யார்
வீட்டின்
கதவுகளையும்
தட்டுவதில்லை

பேனா முனைகள்
பேப்பரில்
எழுத இயலா
வார்த்தைகளாயின

அன்புள்ள
இப்படிக்கு

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

உலகில் இயற்கை
உன்னதப் படைப்பு

யாவர்க்கும் பொதுவாய்
யாவர்க்கும் பயனாய்

காற்று எங்கும்
களிப்புடன் பரவும்

விடியலில் ஆதவன்
வெளிச்சம் தருவான்

இரவில் நிலவு
இதந் தரும்

மழையோ பொழிந்து
மண்வளம் காக்கும்

ஐம்பூதங்கள் யாவும்
ஐயமின்றி பொதுவில்

மனிதன் மட்டும்
மமதையால் துள்ளல்

பிறப்பொன்றாய்
இறப்பு வேறாய்

தனித்துப் பிறப்பு
தலை கீழாய்

உள்ளே ஓடும்
உதிரம் செம்மையே

நிறபேதம் கொண்டே
அறநெறி பிறழ்வு

பணத்தால் ஏற்றத்தாழ்வு
பண்பைக் குறைக்கும்

வாழ்வில் மேடும்
வாட்டத்தில் இறக்கமும்

எல்லோர்க்கும் வரும்
ஏதத்தைத் தந்திடும்

செய்தொழில் அவரவர்
செயல் திறனால்

உழைப்பும் மாறும்
உணர்வும் மாறும்

அன்போடு யாவரையும்
அரவணைத்தல் சிறப்பு

மனிதனாய்ப் பிறப்பு
மனிதநேயத்தால் உயர்வு



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# துளிப்பாக்கள்

தாழிடாத ஜன்னல் கதவுகளை
திறப்பதும் மூடுவதுமாய்
இருக்கிறது பலத்தகாற்று.

என் ஏக்கப் பெருமூச்சை
மொத்தமாய்க் கொண்டுச்
செல்லுமவள் பேரழகி!

முதலில் கொதித்தது
பொத்தி வைத்த
உலை.

என்னவள் பூச்சூடும்போது
கூந்தல் செடியில் பூக்கிறது
பூக்கள்.

அமைதி வீற்றிருந்த இடத்தில்
என்பங்களிப்பாய் தியானத்தை
விதைத்து விட்டு வந்திருக்கிறேன்.

உதிர்ந்த சருகும் இறகும்
ஒன்றாய்ப் பயணிக்கிறது
கவிதை ஒன்றில்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# சேவகம் செய்ய விரும்புகிறேன்

காண வைத்தாய் உலகை
காட்டினாய் தந்தையை

காடு மலைகளை வரைந்து தந்தாய்
காதுகளிலே தாலாட்டிசை பாடினாய்

காத்திருந்தாய் பள்ளிவிட்டு நேரமான போது
காந்தி புகழ் கற்றுதந்தாய்

காயங்களுக்கு மருந்திட்டாய்
காய்கனிகளின் சத்துக்கள் சொன்னாய்



காரணங்களோடு விளக்கம் தந்தாய்
காரிருளிலே வெளிச்சம் ஆனாய்

காலைமாலை தாதியானாய்
கால் கைகளுக்கு மருதாணி இட்டாய்

காவியக்கதைகளால் தூங்கச்செய்தாய்
காற்றில்லா நேரம் விசிறியானாய்

காண்பதெல்லாம் வாங்கிதந்தாய்
காப்பாற்றி பத்து மாதம் பெற்றெடுத்தாய்

காலமெல்லாம் நான் வாழவே
காலத்தில் வலிகளை தாங்கினாயே

காணக்கிடைத்த கடவுள் தாயே நீயே
காரியம் செய்து உனக்கு
சேவகம் செய்ய விரும்பிகிறேனே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# மையல் சேர்க்கும் மைவிழிப் பாவையே

செவ்விதழின் வண்ணமே
மயங்கிடும் எண்ணமே

சிவந்த மேனியே
புன்னகைக்கிறாய் நாணியே

பிரம்மனின் படைப்பே
சிற்றிடையில் சிதறுகிறேனே

எழிலான ஓவியமே
எழுதுகிறேன் காவியமே



தளிருடல் தாரகையே
தழுவிடத்தான் ஆவலானதே

மதிமுகமும் மிளிருதடி
மனதினிலே ஒளிருதடி

இலக்கணமில்லாக் கவிதையே
வானத்து தேவதையே

திரையிட்டு மறைக்காதே
திண்டாடித்தான் போகிறேனே

கருவண்டு விழிகளை
அசைத்தேக் கவர்ந்திட்டாயே

என்னுள் நுழைந்தே
ஏகாந்தமதைப் போக்கினாயே

இதழமுதம் பருகிடவே
நித்தமும் விழைகிறேனே

கார்குழல் காரிகையே
காந்தமாய் ஈர்க்கிறாயே

மையல் சேர்க்கும்
மைவிழிப் பாவையே

குயிலோசைக் குரலிலே
குதூகலமும் பிறக்குதடி

நினைவுகளில் கலந்தவளே
கனவினில் கரைந்தவளே

வாழ்வும் நீதானே
வசந்தமாய் வந்தவளே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# விரல்கள் மீட்டாத வீணை நீயடி!

அங்கயற்கண்ணியின் விழிகளுக்கு
அளந்து அடியெடுத்து
அழகு சொன்ன தேவதை நீயடி.
அழகின் மொத்தத்திற்கும்
அறுவடை பணிக்கும்
அன்பின் ஆர்வம் நீயடி.

இனம் கண்ட
இன்பத்தின் அருவியாம்
இமயமும் நீயடி.
இன்னல்கள் எல்லாம்
மின்னல்களாக பறந்திடச்
செய்யும் இயந்திரன் நீயடி.

உலகின் ஒளியாம்
ஆதவனையே ஆடச்செய்யும்
உதயவானின் ஒளி நீயடி
ஒளிந்து மறைந்தே
ஓரங்கட்டும் பால் நிலா நீயடி.

என்விரல்கள் மீட்டாத
வீணை நீயடி.
ஏக்கங்களை தாலாட்டாக
வீசிச்செல்லும் காரிகை நீயடி.

ஆவணியாய்
அணிகலன்களாய் அணிந்தவள் நீயடி
ஆசை காட்டி அலைக்களிக்கும்
விண்ணின் வானவில் நீயடி.




விரல்களின் தொடல்களில்
விரகதாபத்தை பற்ற வைத்தவள் நீயடி
தொட்டால் சிவக்கும்
கன்னங்கள் சுமந்தவள் நீயடி.

ஒதுங்கி நின்று வேடிக்கை காட்டும்
ஒட்டவிடாத மங்கை நீயடி.
விரல்கள் மீட்டப்போகும்
விண்ணவன் காத்திருக்கிறேன்
வாயேன் நீயடி.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# என்ன இருக்கிறது நம்மிடம்?

கவிதை எழுத
நீ இல்லாமல்
நான் செத்துப் போவேன்

கற்பனையே கண் திறந்து பார்
எழுத்து மலர்களைச் சூடி வா

நாலு மனிதர்கள் நம்மை தூற்றட்டும்
இரண்டு மணிகள் கூடவா தேராமல் போகும்?

நானும் நீயும் ஒரு ஓரமாய் உட்கார்ந்து
கதை பேசுவதற்கு அல்ல,
இவர்கள் கதையை
இவர்களுக்கே கதைப்போம் .



நம்மை பேசுபவர்கள்
வாய் வற்றித் தொண்டை வறண்டு

கிறுகிறுத்துப் போகலாம்.
வாணியும் ஊத்தலாம்.

வாய் துடைத்துக் கொள்ள
கவிதை நெசவு செய்து
குடிக்கநீரும் உடுக்க உடையும்
உண்ண உணவும் உழைக்க மனமும்

வழங்குவதன்றி மிஞ்சி மிஞ்சி
என்ன இருக்கப் போகிறது நம்மிடம்?

கவிஞர் கா. சிவகவி காளிதாசன், மாலைபீடு

அன்பு அகத்தில் நிரம்ப
வெறுமை புறத்தில் நிற்க
இல்லறம் நல்லறமாகும்.

அல்லவை நீக்கி நல்லவை நல்கி
இறுக்கம் தளர்த்தி இணக்கம் காட்டி
இணைந்து மனமொன்றி வாழ்க!



உறவுகள் உணர்வுக்கு மதிப்பளித்து
உள்ளத்தை இறுகப்பற்றி உறைந்திரு!
கூடி வாழ்தலே கோடி இன்பம்!

பொருளீட்டும் நுணுக்கம் தெளிந்து
தீமை நீக்கி நன்மை பெருக்கி
அறத்தோடு நிற்க!

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# நம்பிக்கையூட்டும் அலைகள்

எல்லாவற்றையும் நீர்மலமாக்கி,
நீலமாய்க் கரைத்து அழகாக்கி,
தூரமும் ஆழமும் ஒருங்கே அமைத்து
இயற்கையின் கருணையை கண்டடைந்து,

சுயம் கரைந்து ஒழுகும் வெளியாக
ஒருமையின் வேறு வேறு வண்ணங்களுடன்
இறைந்து கொண்டிருக்கிறது கடற்கரைகள்.

மறைந்து தோன்றும் சித்திரங்களும்,
அலைகளுடன் பேசும் தனிமையும்,
வெறித்துப் பார்க்கும் வெளியும்,
சிதறிக் கிடக்கும் கற்குவியல்களும்,
மெத்தையென விரிந்த பரப்பும்,
காற்றின் துணையுடன் உருவாகும் நெளிவும்,
சிறுவர்கள் விட்டுச் சென்ற மணல் மலைகளும்,
காலடிச்சுவடுகளின் பதிவுகளும்,
மனித மனநிலைகளின் பிரதிபலிப்பும்,
நிமிடத்துக்கு நிமிடம்
மாற்றிக் கொண்டே இருக்கிறது



கடற்கரைகளின் முகங்களை.
இத்தனைக்கு மத்தியில் ஆள் அரவமற்ற
இயற்கையின் பிரம்மாண்டத்தில்,
மௌன அலைக்கழிதலுக்கு ஆட்பட்ட போதும்,
சமநிலையுடன் தக்க வைத்துக் கொண்டிருக்கும்
கடற்கரைகள், ஒரு ஆழ்ந்த அமைதியை.
எதுவும் நிரந்தரமல்ல என்ற நம்பிக்கையை
மனிதர்களுக்கு நுட்பமாக
சொல்லிக் கொண்டே இருக்கிறது!

*கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு*

# மணிமேகலை (பதிமூன்று)

12. அறவணர்த் தொழுத காதை :

1. மாதவி, சுதமதி
மகளைக் காணாமல் மாதவி சுதமதி கலங்கினார்கள்
அவள் கூறிச் சென்ற ஏழாம் நாளும் வந்து விட்டது
தவ மகளுக்கு ஏதேனும் நடந்திருக்குமோ வருந்தினாள்
அவர்கள் முன் மணிமேகலை தோன்ற மகிழ்ந்தார்கள்

2. அமுதசுரபி
தன்னிடம் இருந்த அமுதசுரபியை தாயிடம் காண்பித்தாள்
"என்னிடம் இருக்கும் இது ஆபுத்திரன் கையில் இருந்தது
உன்முன் இருக்கும் இப்பாத்திரத்தை தொழுது வணங்குங்கள்
என்னோடு வாரும் அறவண அடிகளை சென்று பார்க்கலாம்"

3.அறவண அடிகள்
அறவண அடிகள் இருப்பிடத்தை அடைந்தனர் மூவரும்
துறவியான அவரிடம் தனக்கு நடந்தவற்றைக் கூறினாள்
முற்பிறப்பில் தாரை வீரை இப்பிறப்பில் மாதவி சுதமதி.
அறம் வளர்க்க அமுதசுரபியுடன் வந்ததைக் கூறினாள்




4. அறவண அடிகள் கூறியது
"தருமங்களின் தலைவன் புத்தன்" அறவணடிகள் பதிலுரை
"தரும வழியில் செல்லும் பாதை சுலபமானது ஆசைகள் அற்றது
அதர்ம வழிப் பாதை ஆசைகள் நிறைந்து துன்பம் தரும் பாதை
அருமையாக வாழவேண்டிய மக்கள் இன்னலுக்கு ஆளாகின்றனர்"

5. அறவணடிகள்
துச்சயனிடம், "உன் இரு தேவியரும் நீயும் நலமா?"கேட்டேன்
அச்சமயம் அவன் கூறியது, புதிதாக பிடித்து வரப்பட்ட யானை
அச்சத்தில் எதிரில் வந்த வீரை அதனால் மிதியுண்டு இறந்தாள்
இச்செய்தியைக் கேட்ட தாரை நிலா முற்றத்தில் விழுந்து இறந்தாள்.

6. உண்மை கூறினார்
இது உன் பழைய வினைப்பயன் வருந்தாதே என்று கூறினேன்
புதிதாக இங்கே மாதவி சுதமதியாக உங்களைப் பார்க்கிறேன்
எதுவாக இருந்தாலும் பிறவிப் பயனடைந்தாய் மணிமேகலை
புதிய பாத்திரம் பசிப்பிணி போக்குதல் சிறந்த அறமாகும்.

7. எல்லாம் புத்தமயம்
புத்தன் பிறந்த காலை மக்கள் எல்லா நலனும் பெறுவார்கள்
அத்தனையும் உன்னதமாக நடைபெறும், மழை பொழியும்
சித்தம் தெளிந்து மக்கள் அன்பு நெறி வழுவாது வாழ்வார்கள்
உத்தமமான பொற்காலம் இது "புத்தம் சரணம் கச்சாமி"

8. மேலும் கூறினார்
பசி தீர்த்தல் ஒன்றே அவ் அறநெறி, நல் வழியில் செல்வீர்
விசித்திரமான இவ்வுலகம் உன்னால் பொலிவு பெறும்
உசிதமான உணவைப் பொழியும் பாத்திரம் அமுதசுரபி
பசிகெட எடுத்தனள் பாத்திரம் இளங்கொடியே வாழ்க '

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# வரம் தருவாயா?

இயலிசை யனைத்தும் உருவாக்கி,
முயலசைவும் நின்னசைவால் நடந்தேறி,
விரலசைவில் எனையாளும் செந்தமிழே!

நித்தம் உனைத் தொழுதாலும்
பத்துப் பகலிரவு படித்தாலும்
தித்திக்கும் இன்தமிழே - உன்
ஆழம் காணாமல் வந்தேனே.

புவியுதித்த அந்நாளில், தமிழே
பக்குவமாய் தாம் உதித்ததை
மறந்திடுமா இந்த பாரும்தான்?
மறந்திருந்திடுமோ இந்நாடும்தான்?

பொழுதனைத்தும் உன்னோடு பேசி
மகிழும் போதெல்லாம் வருந்துகிறேன்
இரவுபகல் வாராமலே போகாதா என்று
உன்னோடு பொழுதனைத்தும் களித்திருக்க.



ஆயிரம் மொழிகள் வந்துதித்தன
பரவியும் தான் பார்த்தன
நேற்றைய மழையில் முளைத்த காளான்கள்
செந்தமிழ்உன் ஆழம் அறியாதவை.

சங்கம் வைத்துக் கொண்டாடப்பட்டவளே
நாளனைத்தும் உனைத் தொழுக வேண்டும்
வாழ்வனைத்தும் உனை அணைக்க வேண்டும்
என்றொரு வரம் தருவாய்!

கவிஞர் சி. வே. முத்துச்செழியன் (எ) மு. வேதப்பிரிசி, சத்திமங்கலம்

# காற்றின் மொழி

கானகத்தில் காற்றாகி
உயிரிடத்தில் மூச்சாகி.
உடலிடத்தில் குரலாகி
வேயிடத்தில் இசையாகி.

இலையுடனே கதைபேசி
அலையுடனே நுரைபேசி
சிலையான மனிதராசி
உனைமறந்தார் உயிர்வாசி.

நீர்சுமந்த முகிலை
நீசுமந்து வந்தென்
மண்ணில் மழைகிறாய்
உந்தன் நிலைதான் என்ன?

வளியின் அசைவில்
ஒலியின் சத்தம்.
உலகில் ஒலிக்கும்
செவிகள் அறியும்.

எந்தன் மொழியை
எவர்தான் அறிவார்
நானோ முகாரிராகம்
முகமில்லை பாவம்.

வாடையை நாளை
வாடகை விடலாம்.
தென்றலை நாளை
தெருவில் விற்கலாம்.




வேர்களை வெட்டியே
நகரங்கள் அமைக்களாம்.
பூமியில் வளிக்கொன
உலகப்போர் நடக்கலாம்.

கருத்துக்கள் கூறியே
காலத்தை ஓட்டலாம்.
காரியம் நடத்திட்டால்
உலகையே மாற்றலாம்.

*கவிஞர் கோ. தினுசன்*

# அவன் மூச்சில் கலந்த காதல்



அவனது காதல் எப்படியானது தெரியுமா?
அவனின் அன்பு எவ்வளவு தூரம் என்று புரியுமா?

கொஞ்சம் கூட சுயநலமில்லாதது
சிறிய அளவு கூட எதிர்பார்ப்பு இல்லாதது

கண்ணில் தென்படாத காற்றை போன்றது
மூச்சிலும் கடந்து சுவாசம் கொள்வது

உருவம் இல்லா நீரை போன்றது
ஓசையோடு எண்ணத்தில் கலந்தது

அவன் காதலை காணாதவன் அல்ல
ஆனாலும் இந்த காதலுக்கு தன்னையே கொடுத்தவன்

எதிர்ப்புகள் எத்தனை வந்தாலும்
யுத்தம் கண்டுவிட நிற்கிறான்

இந்தக் காதல் கண்களை கலங்க வைத்தாலும்
ஒரு நிமிடம் புன்னகைக்காக ஆயத்தமாக நிற்கிறான்

அன்பை மட்டுமல்ல அனைத்தையும் அர்ப்பணிக்க துணிந்தவன்
பூ வில் பிறந்த தேனாக இந்த காதலை சுமந்து வாழ்கிறான்

இறுதி வரை இருப்பான் இந்த காதலுக்காக
இயன்றவரை அன்பை கொடுப்பான் இந்த உயிருக்காக.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# துளியேனும் நம்பிக்கை கொள்

நேர்வழியில் எடுத்த காரியத்தை
முயற்சியுடன் செயலாற்றி
வெற்றிக்கனியை தக்க
வைக்க கிடைத்திடுமே
பேரும் புகழும்!

நிச்சயம் ஒருநாள்
முன்னேறுவோம் என்ற நம்பிக்கை
உன்னை மண்ணில் புதைந்த
விதை வேர் விட்டு விருட்சமாய்
வளர்ந்து நிழல் பரப்பி
பறவையினங்களுக்கு கூடுகட்டிப் பெருக
அடைக்கலம் தருவது போல
எட்டாத உயரத்தை அடைய வைக்கும்!



சிகரம் தொட துளியேனும்
உன் மீது நம்பிக்கை கொள்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை–119

# அறத்தால் நேராவோம்



என்ன நடந்தாலும்
எது விளைந்தாலும்
உருக்கும் துன்பத்திலும்
கருக்கும் கவலைதனிலும்
சலனம் அடைதல் கூடாது
சமநிலை இழத்தல் ஆகாது
சஞ்சலம் துய்த்தல் தீயது
சகஜமாய் இருப்பது நல்லது
சரணம் அடையும் வழிதனிலே
சாத்வீக அடைவில் மனங்களுமே
சகத்தை ஆளும் வல்லோனில்
சமர்ப்பணம் ஆகும் நல்லோரே
அன்பின் வழியே
அழகின் மொழியாம்
அஃதைப் பின்தொடர்ந்து
அறத்தால் நேராவோம்
புன்னகைப் பூத்து
பூலோகம் நிறைத்து
புரிதலில் தொலைந்து
புண்ணியம் வளர்ப்போம்

மாபெரும் இறையை நிலைநிறுத்திய மனம்
மனக்கஷ்டங்கள் இறக்கிட நிம்மதி பெறும்
மிகைத்த இன்னல்கள் மெல்ல விலகும்
மீச்சிறு உள்ளமதில் மகிழ்ச்சி பெருகும்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# வியர்வை சிந்து விடியல் உனக்கு

விடியல் சிந்தும் உலகம் உனக்கு
வியந்துப் பார்த்தால் ஆச்சரியம் எனக்கு
விழிக்கும் முன்னே  உற்சாகம் யாருக்கு
விழியோர கண்ணீரில் நனையும் உறவுக்கு
விழிப்போடு பதில் சொல்ல காத்திருக்கு
விளையும் பூமியில் சொந்தக் காலுக்கு
விவாதம் வாராமல் பார்த்துக் கொள்வதற்கு
விண்ணையும் மண்ணையும் நம்பி வாழ்வதற்கு
வித்தகர் பலர் உண்டு நம்மாளுக்கு
விலைவாசி உயர்வு நாள் நாளுக்கு
விலை பேச  முடியாத நிலைக்கு
வித்திட்டாலும் சிந்தும் வியர்வையின் உரிமைக்கு
விளையாட்டாக குரல் கொடுத்தாலும் மாலைக்கு
விளம்பரமாக  குரல் ஓங்கி ஒலிக்கும்
வித்திட்டவன் எங்கோ இருக்க வித்தகனுக்கு
வித்தியாசம் தெரியாமல்  போனதா மானுடனுக்கு



கவிஞர் ம. செ அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# வாதிடுபவர்கள்

இரட்டை தண்டவாளம்
போலும் நாக்கு

நரம்பில்லாது துடிக்கிறது
நாட்டியமாடுகின்றது

சாத்தியம் தவறி
சனாதன தர்மம் பேசுகிறது

தன் பொறுமை மறந்து
தலைக்கணம் வரம்பேறி

தான் நான்!
அகங்கார வலையில்

சட்ட அதிகாரம் இழக்கிறது
வாய்மை உதறி
வாக்குவாதம் செய்கிறது

பணம் பதவி பண்பிழந்து
பாவம் விழைகிறது ,
மாந்தரின் வீணாக.



கவிஞர் வியாத்தின் சீ.லக்ஷ்ஹரன்

மீண்டும் ஒரு முறை கிடைத்து விடாது என்றே
புகைப்படங்களால் சேகரிக்கிறோம்

சின்ன இதயமும் பெயர் குறிப்பிடப்பட்டு
குறிப்புகள் சேகரிக்கிறது

யன்னல் இருக்கை காதலர்கள் நாங்கள்
சண்டையொன்று போடாமல்
இவ்விடம் இலகில் கிடைத்து விடுவதில்லை

போகும் தூரம் தெரிவதில்லை
பார்க்கும் காட்சிகள் மறைவதில்லை

துரத்தும் மரங்கள் அசைவதில்லை
எண்ணங்கள் ஊசலாடுகிறது
அந்த பேருந்தைப்போல

நினையாத நினைவும் மீண்டு பார்க்கும்
வேண்டா நினைவும் அன்ற பார்க்கும்
குன்றாத மனதும் குன்றிட பார்க்கும்

சொந்தங்களின் கரகோஷம் காதில் விழ
கைகள் தாளம் இட
பாட்டு வரிகளை நாவும் அசைத்திடும்

இடைக் குழப்பனாய் இயற்கை உபாதை தடுக்கும்
பேச்சுகள் மௌனிக்கும்
கூச்சம் வெளியேறும்

ஏதேதோ எண்ணக் குவியலாகும்
வார்த்தைகள் வீரமாக எழும்
எழுதிடும் முன் மறைந்திடும்

மீட்டி பார்க்க பயண வேட்கை மறுக்கும்
இப்படியும் அப்படியும் பெட்டகம் சேரும் நினைவுகள்

சென்ற பயணத்தில் செல்லமாக சேர்க்க காணும்
மனிதரிடம் பேச்சு கொடுத்து
புன்னகையோடு கடந்திடுகிறேன்

இன்பமாக வழியனுப்புகினர்
கடந்து வர மனதில் சிறு வழிவரும்

அடுத்த பயண நீடிப்பில் மறக்கிறது
புது காட்சி புலப்பட்டு வரவேற்கிறது

புன்னகையே முழுமையாக காணுகிறது
சோகங்கள் மறந்தே விடுகிறது
நடந்து பார்க்க கால்கள் கேட்கிறது

மனமோ சிறகு முளைத்த பறவையாய் மாறியது
அலைகள் பேசும் மொழி ஆனந்த ஊற்றை எழுப்புகிறது
இந்த பயணங்கள் இப்படிய நீள்ந்தால் தான் என்ன



கவிஞர் சஹீனாஸ் பேகம், இலங்கை

# பேனா

என்ன இந்நிலையில் கொண்டு வந்த பேனா
என் கல்வியில் படித்து எழுத வைத்த பேனா

என் முதற்சொல் அப்பா அம்மா என்பதை
எழுத வைத்து பேனா

என் அனைத்து சான்றிதழ்
கையொப்பம் போட வைத்த பேனா

என் கவிதையை வெளிக் கொண்டு வந்த பேனா
என் பேனாவால் தான் நான் கவி எழுத்தாளர்

பேனாவைக் கொண்டு எழுதத் தொடங்கி
நான் இன்று எழுத்தாளர்.



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

# தேவை அவளுக்கென்று தனியறை

அவள் தங்கை
அவளுக்கு ஒரு அண்ணன்
அவனைப் பற்றி உலகறியும்
அவளை அறியார் ஒருவரும்

அவனுக்கென்று தனியறை உண்டு
அதனுள் தனி நூலகம் உண்டு
ஏன் தனி உலகமே உண்டு
வெளியே நடப்பது தெரியாது

அவன் கவிதைகள் எழுதுவான்
அவன் கதைகள் எழுதுவான்
அவன் நாடகங்கள் உலகறியும்
அவன் பெயர் ஷேக்ஸ்பியர்

நண்பர்களுடன் கதைப்பான்
காலார வீதிகளில் நடப்பான்
கற்பனை பீரிட அறைக்குள் தஞ்சமாவான்
விடிவது தெரியாது! முடிவது தெரியாது

புதிது புதிதாக படைப்பான்
அதனால் அவன் பேர் இறைவன்
பூலோகத்தில் அவன் ஒரு அதிசயம்
கொண்டாடும் அவனை அதிகம்

அவளும் அதிகம் சிந்திப்பாள்
எழுதவும் செய்வாள்
ஆனால் விடிந்ததும் சமையல்
பின்பு துணி துவையல்
வீடு கூட்டல்! கழித்தல்! பெருக்கல்!

அவள் பெயர் ஜூடித் ஷேக்ஸ்பியர்
ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்
ஒன்றை உலகறியும்
மற்றொன்று உலகறியும்
தேவை அவளுக்கென்று தனியறை!



கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# நிதியின்றி நிம்மதியேது?

பொருளைத் தேடியே அலைந்திடும் வாழ்விதே
இருளை விலக்கியே அலுத்திடும் ஆயுளுமே
வேகத்திற்கு தடையென பல்லாயிரம் இடர்களே
போகும் பயணத்தின் வழிகளில் இன்னல்களே

உழைத்தே தேய்ந்திடும் உடலின் உறுப்புகளுமே
உருகியே அழுதிடும் உள்ளமும் உயிருமே
கருவறை முதலே துவங்கிடும் போராட்டமே
கல்லறை வரையிலும் விடாதுத் துரத்துமே

இன்னுமா இல்லையென ஒவ்வொரு பருவத்திலுமே
இல்லாமையைப் பழித்தே உலகம் செல்லுமே
நிதியில்லா வாழ்விதிலே நிம்மதியே இல்லையே
மதியிருப்போர் அறமின்றி வாழ்வதும் இல்லையே



நாடிடும் யாவிலும் பணத்தாளே விளையாடுதே
தேடியே தவித்திடும் உயிர்களோ அழிகிறதே
அத்யாவசியத் தேவைக்கும் ஆதாரமாய் செல்வமே
ஆடம்பரத்தில் ஆசைப்படின் அழிவினையே கூட்டுமே

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# பால்காரன்

மழைக்கால அதிகாலையில்
ரெயின் கோட் இல்லாத பால்காரன்
தலையில் மடித்து சொருகிய
ஜவுளிக்கடை ஜவ்வு தாள் பையில் உள்ளது
அவன் குடும்பத்திற்கான
பாதுகாப்பும் உழைப்பும்



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# இது நம் பூமி

ஓங்கு புகழ் வையத்து ஓரமாய் ஒதுங்குது ஏன்?
கங்கை நீர்ப் புரண்டோடும் பாரதத்திலே மாய்வது ஏன்?

சங்க இலக்கியங்கள் பேசுகின்ற தமிழன்னை இருக்க மடிவது ஏன்?
பங்கமின்றி பறைசாற்றி பிரகாசிக்க பகலவன் இருக்க மங்குவது ஏன்?

சிங்கமாய் சீறி எழும் வீரத்தமிழனாய் இருக்க வீழ்வது ஏன்?
எங்கும் நிறைந்த சோதியாய் வெண்மதி இருக்க மரித்தல் ஏன்?

திங்கள் முடிசூடி திசையெட்டும் காக்கும் இறைவன் இருக்க உழல்வது ஏன்?
தங்கமென மின்னி தாய்மை வரமான பெண்மை உடனிருக்க சாய்வதும் ஏன்?

விங்கும் மனங்களே விரக்தி வேண்டாம் இது நம் பூமி
தங்கும் விடுதியில்ல இது நமக்கான பாதையை கொடுத்த தரணி!



கவிஞர் கே. கல்பனா, திருவனந்தபுரம்

# 'கதவு வழியாக' ஒரு உரையாடல்

அவள் அப்பாவின் மரணச் செய்தி
எப்படிச்சொல்வதெனத் தெரியாமல்
குழம்பிப்போய் நிற்கிறேன்
குடிபோதை அளவுக்கதிகமாய்
இருந்திருக்கலாம்
கவனக்குறைவாகவும்
இருந்திருக்கலாம்
எதிரே வந்தவன் தவறாகவும்
இருந்திருக்கலாம்
முடிவு அவரின் மரணம்.

எப்படியோ விலாசம்தேடி
வியர்க்க விறுவிறுக்க
வந்து நிற்கிறேன்
நீண்ட நேர அழைப்பிற்குப் பிறகு
கதவைத் திறக்காமலே
யாரென்று
ஈனசுரத்தோடு
ஒரு பெண்ணின் குரல்
நீண்ட நாளாகப் பட்டினி கிடக்கும்
வயோதிகனைப்போல
மிக மெல்லியதாய் கேட்கிறது

அப்பா என்று சொல்வதற்குள்
அவர் இங்கில்லை என்று பதில் வருகிறது
தெரியுமென்கிறேன் நான்
பிறகேன் இங்கு வந்தாய்
என்கிறது அக்குரல்
இறப்புச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்
இன்னும் முடிவதற்குள்
எப்படி என்பதிலிருந்து புரிகிறது

கதவிடுக்கின் வழியாக
கூர்ந்து பார்க்கிறேன்
மின்விசிறியில் தொங்கிக்கொண்டு இருக்கிறது
இறுக்கி முடியப்பட்ட ஒரு சேலை
சரியான நேரத்திற்குத்தான் வந்திருக்கிறேன்
இன்னும் திறக்கப்படாமலேயே முடிவடைகிறது
எங்களுக்கிடையேயான உரையாடல்
இது இறப்பு காலமாக இருக்கலாம்.



கவிஞர் சௌ. நாகநாதன், இராமநாதபுரம்

தாறுமாறான சிந்தனை
ஓட்டத்தையும்
சிறிது ஒழுங்குப்படுத்துகிறது
அந்த
கருப்பு தார்சாலையின்
வெள்ளைக் கோடுகள்.

*

அமிலங்களால் நீல லிட்மஸ் தாள்களை
சிவப்பாக்க தான் முடிகிறது.
ஆனால்
உன் பார்வையால்
ஒரு ஜென்மத்தையே
எரிக்க முடிகிறது.

*

"புறத் தூய்மை நீரினால் அமையும்",
ஆமாம் உண்மை தான்,
ஒரு தூய்மையினால் மட்டுமே
இன்னொரு தூய்மையை
உருவாக்க முடியும்,



*

சிதிலமடைத்த பழைய
வீடுகள்
இன்னும் சுமந்துக் கொண்டிருக்கிறது.
பழைய கதைகளை.

கவிஞர் இரா. மதிராஜ்

# சின்ன சின்ன

யாரோவாகிப் போனபின்
கேட்கும் குரல்களில்
ஏதோவொரு சாயல்துளி

தினச் சமையலில்
சுவையிலேதோ விரலிடையில்
நினைவூட்டி தங்கும்

பார்வையில் தூரமாகியும்
பாரமாகிப் போகும் பிம்பம்

என்றாவது சந்திக்கலாம்
நாளையென்று ஒரு பொழுது
கிடைக்காமலா போகும்



மர நிழலிலோ
மனதின் நிகழ்விலோ

மாய ஒளியிலோ
மர்ம பனியிலோ

தன்னில் விலக்கி
முன் நிற்கும் மறதியில்!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# கலையாத தவம்

வாசித்த புத்தகங்களை
சற்றே மனம் புரட்டி ரசிக்கிறது
மறக்காத காட்சிகளை
களவாடி பதுக்கிய தினத்தையும்
ரசித்தது



இனித்த நாட்கள் அவை
இளமைக்கூடாரத்தில்
அந்த ஸ்பரிசங்கள் அளப்பறிய
சந்தோசம்

காதுக்குள் விழும் திட்டுகளை
ஓரம்கட்டி
இரவையே இரகசியமாக்கி
சிம்னியின் துணையில்
புரட்டியே பக்கங்கள்

ஆஹா பேரின்ப நாட்களே
சலிக்காத பேராசைதான்
மௌனத்தின் மீதமர்ந்து
மனம்மயங்கி மீட்டும் மௌனமாய்

பிடித்த வரிகளுக்கு
ஓர் தடயம் பதித்து
மறக்காதிருக்கும் வார்த்தை வருடலில்
சில்லென்ற உணர்வின்
சிறுபிள்ளை ரசனையாய்

தொடருமோ என்ற பயத்தின்
சாயலை வென்றுவிட்ட
நேசங்கள்

உரசும் விரல்களும் பேசும் மந்திரம்
கடத்தி செல்லும் மனதும்
கற்பனைத் தூரிகையை
வரைந்து வளைக்கிறது

துளிர்த்த நம்பிக்கையும்
உன்னால் நடந்தது
பதிய அகம் திறந்து புல்லாங்குழல்
வாசிக்குது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகை மாவட்டம்

# உயரிய வாழ்க்கை

உண்மை உழைப்பு இளைஞனுக்கு
உயரிய வாழ்க்கை தந்திடுமே.

குடத்திவிட்ட விளக்காய் அமைந்த வாழ்க்கை
என்றுமே வெற்றி என்னும்
கனவை வென்றிட முடியாது.

குன்றிலிட்ட விளக்காய் சமூகம் சார்ந்த வாழ்வுதான்
வெற்றி என்னும் கனியை வென்றிட முடியுமே.

உயர்ந்த லட்சியம் உள்ள மனிதனுக்கு
வெற்றி என்பது பக்கமே வானமே எல்லையாய்
பறந்து உயர்ந்த மனிதனுக்கு
வெற்றி என்பது கனவல்ல
உயர் இலட்சிய வாழ்வின் கனவு அது.



அவமானம் இல்லாத வெகுமானம் இல்லையே
அடிபட்ட பந்து தான் இலக்கு நோக்கி பாயுமே.

தன்னம்பிக்கை உள்ளவர்களை
எல்லா சிறப்புகளும் வலம் வரும்.

உழைப்பு
வறுமையை மட்டுமல்ல தீமைகளையும் விரட்டுமே.

நல்ல நண்பர்கள் நல்ல புத்தகங்கள்
பெரியோர்களின் ஆலோசனைகள் பெற்று
உழைப்பை நட்பாய் கொண்டவனுக்கு
வெற்றி என்ற விருது அவனை நட்பாய்
வளம் வரும் நாளுமே!

*கவிஞர் ஜேபி (எ) பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு*

# நேசம்


நான் கூடு கட்டப் பார்க்கிறேன்
நீ வீடு கட்டப் பார்க்கிறாய்
நிலத்தில் வேரூன்றும்
உனக்கான மனதில்
வானத்தை அளக்கத் துடிக்கும்
எனக்கான இறகுகள்
கட்டி வைக்கப் படுகையில்
நிம்மதியும் நிலைப்பாடும்
கணிக்கத் தெரியாத
காலநிலையைப் போல
ஊஞ்சலாடுகிறது
உனக்கும் எனக்குமான நேசம்



கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# வாழ்க்கைப் பயணம்

இடைவிடாத பயணங்களும்
இடையிடையே நிறுத்தங்களும்
இங்கே குறைவில்லை
இன்றைய உறவு நாளை இல்லை
இருப்பிடம் வந்தால்
இறங்கித்தானே ஆகவேண்டும்.



பயணங்கள் தோறும்
படிப்பினைகள் ஆமரமுண்டு
பாதைகள மாறும்போது
பயணங்களும் மாறும்
பழகிய நட்புக்கள் யாவும்
பயண முடிவு வரை தொடர்வதில்லை.

இடையில் ஏறி நம்மோடு
இருக்கையில் ஒன்றாய் அமர்வதும்
இடை விலகலும் குறுகிய சந்திப்புக்கள்
இலக்குகள் யாவும் ஒன்றல்ல.
இடையில் நிறுத்தங்கள் வந்தால்
இறங்கித்தான் ஆகவேண்டும்.

பள்ளங்களும் மேடுகளும் நம்
பாதைகளின் ஒவ்வொரு திருப்பங்கள்
பயணங்களின் நெடுகலும் குறுகலும்
பழகிய சொந்தங்களும் பிரிவுகளும்
பாரினில் நமக்கு மறவாத மீட்டல்கள்
பாதைகள் மாறிய பயணங்கள்.


காத்திருப்புக்கள் இங்கு தாராளம்
கைகாட்டிச் செல்வதும்
கைகொடுத்து வண்டியில் ஏற்றுவதும்
கண்டும் காணாமல் போவதும் சகஜம்.
கடுகதியில் நம் பயணங்கள் முடிவதும்
கச்சிதமாய் மறைக்கப்பட்ட நியதிகள்.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆயிஷா, கம்பளை

# தமிழ்மொழி

உலகெங்கும் உண்டு பலமொழி
அவற்றில்உவகை அளிக்கும் மொழி தமிழ்மொழி
கற்காலம் முதல் கணிணி காலம் வரை
களிப்புடன் பேசும் மொழி தமிழ் மொழி

பாமர மக்கள் முதல் பண்டிதர் வரை
பிறப்பு முதல் இறப்பு வரை
பல்லாண்டு தொடர்ந்து வரும் தமிழ்மொழி
கிராமம் முதல் நகரம் எனத்தொடங்கி
கடல்கள் கடந்தும் கலப்பில்லாமொழி தமிழ்மொழி



சங்கத்துச் சான்றோர்கள் சங்கம் வைத்து
சந்தோஷத்துடன் வளர்த்த தமிழ்மொழி
சங்கமருவிய காலத்திலும் சற்றும்
சளைக்காது வளர்ந்தமொழி தமிழ்மொழி

பல்லவர்கள் பக்தியுடன் பரப்பிய மொழி
பல நாட்டவர்களை ஈர்த்த மொழி
சோழ நாட்டினிலும் நறுஞ்சோலையிடத்திலும்
சக தோழர்கள் பரஸ்பரம் புரிந்திடும் தமிழ்மொழி

நாயக்கர் அவைதனிலே நயமுடன் தவழ்ந்த மொழி
இனிமைச் சுவையுள்ள தமிழ்மொழி
கபிலரும் பரணரும் கருத்துடன் போற்றிய தமிழ்மொழி
புகழ்பெற்ற புகழேந்தி புகழ்ந்து போற்றிய மொழி
கவிச்சக்கரவர்த்தி கம்பனும் களிப்புடனே
கவி புனைந்த மொழியே தமிழ்மொழி

குழந்தைகள் மழலையிலும் குமரியின் பேச்சிலும்
குளிர்மையாய் இருக்கும் மொழி
ஆடவர் நாவில் வந்திடும் அன்பு மொழி
அனைத்திலும் சிறந்த தமிழ்மொழி

பிறமொழிக் கவிஞர்களும் பிரியமுடன்
கற்கும் பெருமொழி தமிழ்மொழி
தசாப்தங்கள் பல கடந்த போதும்
தரணியிலே தலை நிமிர்ந்து நிற்கும் மொழி
தற்பெருமையற்ற தமிழ்மொழி

ஏழு கண்டங்களிலும் எண்ணற்ற நாடுகளிலும்
எள்ளளவும் இழப்பு ஏதுமன்றி
செழிப்புடனே வளரும் மொழி
செம்மைச் சிறப்புமிக்க செம்மொழியே
எங்கள் தமிழ்மொழி

கவிஞர் தீசியகுமார் டனேஸ்ரி, மட்டக்களப்பு (இலங்கை)

# முள்ளிவாய்க்கால் துயரம்

தமிழுணர்வு கொண்ட அனைவரும்
தவறாமல் உணர்ந்திருக்க வேண்டிய
தொப்புள்கொடி உறவுகளின் உரிமைக் கதை




காலத்தின் பக்கங்களில் தீட்டப்பட்ட
தமிழீழத்தின் சோகக்கதை

ஆலாய் தளைத்திருந்த ஆதி மண்ணிலிருந்து
வேரோடு பிடுங்கப்பட்டு
உறவுகளை மறந்து உணர்வுகளை இழந்து
உயிர் மட்டும் மிஞ்சியிருந்த வெற்றுடலாய்

விழிகளில் வலிகளையும்
மனதில் வடுக்களையும்
சுமந்து இடம்பெயர்ந்தனர் அகதிகளாய்

பீரங்கிகள் முழங்க
பதுங்கிக்கிடந்தனர்
பாதாளக் குழியில்

உப்பில்லாக் கஞ்சிக்கு அணிவகுத்து நிற்கையிலே
உயிர் குடிக்கும் குண்டுகளுக்கு இரையாயினர்
ஏதுமறியா சிறுபிள்ளைகளின் அழுகுரலும்

கயவர்கள் கசக்கியெறிந்த
கன்னிப் பெண்களின் அவலக்குரலும்

கேட்பாரற்று ஓங்கி ஒலித்த சத்தங்களுக்கிடையே
கொத்துக் கொத்தாக மாண்டு போன

முகவரி தொலைத்து
தமிழினத்தின் அடையாளமாய்

எழுத்துக்களுக்குள் அடக்க முடியாத
சொற்களைக் கொண்டு விவரிக்க முடியாத
வஞ்சிக்கப்பட்ட ஓர் இனத்தின் இரத்தச் சரித்திரம்

"முள்ளிவாய்க்கால்"

கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# மாறினால் மாறிவிடும்

கைநிறைய காசு வேண்டும்
கனவு காணும் வாழ்வு வேண்டும்
பை நிறைய பணமும் வேண்டும்
பங்களா போல் வீடு வேண்டும்
சொகுசு கார்கள் நிறைய வேண்டும்
சொந்தமாக சொற்கம் வேண்டும்
இன்பமெல்லாம் மீண்டும் மீண்டும்
என்னை மட்டும் தழுவ வேண்டும்
அத்தனைக்கும் ஆசை வைத்தாய்
ஆண்டவனை துணைக்கழைத்தாய்
உனக்கும் கொஞ்சம் பங்கு என்று
படைத்தவனை மடக்கப் பார்த்தாய்
நடக்கவில்லை என்றதுமே
நாளும் அவனை திட்டி தீர்த்தாய்
நியாயமற்ற செயலிதுவே
நண்பர்களே கேட்டிடுங்கள்



செயல்பட்டால் மட்டும்தான் செயற்கரிய காரியங்கள்
மாறுபட்ட எண்ணம்தான் வேறுபட்ட வாழ்வு தரும்
அன்றாடம் செய்கின்ற அலுவலயே செய்திருந்தால்
ஒன்றான பலன்தானே உன்னிடத்தில் கிடைக்கப்பெறும்
இல்லாத வாழ்விற்கு ஏங்கி நிற்கும் அன்பு நண்பா

செய்யாத செயலை நீ செய்தாக வேண்டுமன்றோ
பெரிதாக சிந்தித்து புதிதாக முயற்சித்தால்
அறிவதனை வளர்த்திட்டால் அயராது உழைத்திட்டால்
கற்பனையில் கண்டதெல்லாம் கையறுகில் வந்துவிடும்
காரணங்கள் சொல்பவர்கள் காரியங்கள் செய்வதில்லை
காரியங்கள் செய்பவர்கள் காரணங்கள் சொல்வதில்லை

மற்றதெல்லாம் மாறிவிட்டால் மாற்றமிங்கே நிகழுமென்ற
மதிகெட்ட சிந்தனையை இனி விட்டு ஒழித்துவிடு
உனக்குள்ளே மாற்றத்தை உருவாக்க உறுதிபூண்டால்
நினைக்கின்ற வாழ்வனைத்தும் நிச்சயமாய் கைகூடும்

கவிஞர் அ. தனசேகரன், அருளவாடி, விழுப்புரம் மாவட்டம்

கோடைகாலத்தில் உன்னதம்
மாண்புமிகு மகத்துவம்
இன்னும் மீளவில்லை ஏன் ?

நதிக்கரையில் நாவல் பாடி நவத்தாண்டவம் ஆடி ,
உல்லாசம் பெயரில் சல்லாபம் செய்து
விரிசல் என்று கூறி நெரிசல் ஆக்கினாய்; மனிதா!

கரிசனம் இன்றி அனைத்தையும் உனதாக்கி,
இன்று காலத்தின் சீற்றம் என்று வெப்பமும் , மழையும்
இடை விடாது உன்னை சீண்டுகிறது.

ஓர் பிணைப்புடன் இருந்த வனாந்தரத்தை தனதாக்கினாய்,
உன் வாழ்வின் உன்னதம் காண அறுத்தாய்.
ஒவ்வொன்றும் வீழ்ந்தது; மரம் தான்

இன்று தன்னையே மறந்தாய்,
இயற்கை காற்றை கடன் வாங்கி
மூச்சு சுவாசத்தை விலையாக்கினாய்.



கவிஞர் கனிதன் மா. சரவணன், இலங்கை

# சின்ன சின்ன ரகசியங்கள்

சின்னச் சின்ன ரகசியங்கள்
சிங்காரமாய் பேசுதய்யா!

தங்கமகன் உன்னைக் காண
தனியொருத்தி தவமிருக்க!

பட்டாளத்துல இருக்குற மாமா
பாசத்துல அங்கே இருப்பீரோ

கவலைப்படாம இரு தங்கமேன்னு
கண்ணியம் தவறாமப் போகையிலே

கண்ணைப் பார்த்து கதை பேசிய
கண்ணாளன் முகமும் ரகசியங்கள் சொன்னதிங்கே!

உன்னை விட்டுப் போறேன்னு
என் மனசும் தவிக்குதுன்னு

கடமையை முடித்து விட்டு வாரேன்
கலங்காமல் இருந்திடு

கல்யாணக் கனவுல நீயும் இரு
கையில் தாலியோட வெரசாத்தான் வாரேன்னு

முகம் பார்த்து சொல்லாம போனாலும் என் மாமா
உன் கண்ணால சொன்ன ரகசியம்
என் மனசுக்குப் புரிஞ்சதிங்கே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# அவனோடு

சிகை கோதி
நட்போடு நீ நடக்க
சிலிர்த்த மேனியில்
சிதறாத பார்வை
உன் மீது.

உணர்வின் எல்லையில்
உன்னோடு தனித்திருக்க
நெற்றி முத்தத்தில்
முத்திரை இட்டே
நகைக்கிறாயடா நிசப்தமாய்.



நிழலில்லா நிலவில்
பூகம்பம் போல
என் நிழலும் உனை தொடருதே
உயிரில் பகீரகிக்க.

புழுதியில் தனித்த நான்
கனவில் கரம் தொட்டு
இழுக்க பொறுத்து கொள்ளடி
கடந்திடுவோம் வா
என்றே பயணத்தில் தொடர்கிறோம்
வாழ்நாள் பாதையை.

ஏதேதோ இடையூறு
இருப்பினும் என்றும் யான்
அவனோடு.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# அழுகின்ற நெஞ்சே

அழுகின்ற நெஞ்சேநீ அடங்குவது
எந்நாளோ

தொடரும் பிரிவுகள்
தொல்லையாய்த் துரத்தும்
படரும் பாசம்
பற்றிப் பதறும்

காதலின் வேதனைகள்
களத்தில் போராக
சாதலை நோக்கியே
சங்கடத்தில் ஆளும்



வெந்த மனதும்
வெறுமையில் துடிக்கும்
வந்த வலிகளும்
வார்த்துக் கொல்லும்

உயர்வு தாழ்வு
உள்ளத்திற்குத் தெரியாது
இயன்றளவு போராடி
இதயமும் சிதறும்

ஏழைகளை எப்போதும்
ஏளனமாய் பார்க்கும்
பணமே வாழ்கையாய்
பாடாய்ப் படுத்தும்

வழியில்லா வாழ்வில்
வருத்தமே நிறையும்
அழுகின்ற நெஞ்சேநீ
அடங்குவது எந்நாளோ

கவிஞர் கிருஷ் அபி

பகுதி34 ஆண்டாள் தொடர்ச்சி 4

ஆண்டாளொடு பெரியாழ்வார் வடபத்ரசாய் பெருமாளும்
வில்லிபுத்தூர் சார்ந்தோரே! வன்புதுவை ஸ்ரீதன்விபுரமெனவும்
திவ்யதேசம் இன்னவைகள் வேறுபெயர்! திருவிழாக்கள்:
ஆனி ஆழ்வார் உற்சவம் காண்சூன்சூலை! ஆடிப்பூரம்
ஆகச்ட்டில்! எண்ணெய்காப் பமைவதுவோ டிசம்பரதோ
ஜனவரியோ என்றமையும்!முக்கோயில் ஆண்டுளது:
ஆண்டாளொடு பெரியாழ்வார் வடபத்ர சாய்பகவான்
என்பதுவாம்! மல்லிபேரான் அரசாண்டான்! மகன்
வில்லிகாடு திருத்தி நகரமைத்து வில்லிபுத்தூர்
பேர்வைத்தான்! புராணமுண்டு: வராகக்ஷேத்திரம் ஒருபகுதி
காடாக இருந்ததுவே! இருகுறவச் சகோதரர்கள்
வில்லியொடு கண்டனென்போர் வேட்டைமேல் சென்றனரே!
வேங்கைப்புலி துரத்தியதால் கண்டன்பலி! வில்லியவன்
கண்டனையே தேடினனே! சோர்ந்தவனும் உறங்குங்கால்
கனவதனில் பெருமாளே நிகழ்ந்ததனை உணர்த்தினாரே!
காலநேமி அசுரவதம் செய்தற்காய் ஆலமர
அடிப்புதரில் வடபத்ர சாய்பேரோடு இருப்பதுவாய்
காடழித்து நாடாக்கி கோபுரமமை கோயில்காண்!
என்றவுரை வழங்கினரே! வில்லிபுத்தூர் ஆனதுவே!
ஆண்டாளெண் ணெய்காப்பு தைலமதில் மூலிகைகள்
அறுபத்தொன் றுவகைகள் சேர்ந்துளதே! நாற்பதுநாள்
காய்ச்சியது! நல்லெண்ணெய் பசுவின்பால் நெல்லிக்காய்
தாழம்பூ இளநீரும் இதிலுண்டே! ஏழுபடி
அளவுள்ள எண்ணெய்தனை இருவராகக் காய்ச்சியபின்
நான்குபடி தைலத்தை நேர்காண்பர்! எண்ணெய்காப்
புற்சவமோ எட்டுநாட்கள் நிகழ்ந்திடுமே! மார்கழியில்
முடிந்தபின்னே பக்தர்கட்கு தைலத்தை பிரசாதமாய்
வழங்குவரே! நோய்தீர்க்கும் நன்மருந்தாம்! கோதைதன்
சார்பாக கருத்துரைக்க மேலும்பல உள்ளதனால்
தொடர்ந்திடுமே! வாழிகோதை! ஆண்டாள்சீர் ஓங்குகவே!



*கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)*

தூக்கில் சோறும், தொறட்டியும் கையிலேந்தி
ஆட்டு மந்தையுடன் அன்றாடம் சென்றிடுவேன்!
ஏட்டறிவு இல்லாததால் ஏற்றிட்டேன் இத்தொழிலை!
அடுத்தவர் நிலங்களில் பயிர்களை மேயாமல்
தடுத்துக் காப்பதில் தனிக்கவனம் செலுத்திடுவேன்!
ஓடுகின்ற ஆடுகளை ஓரமாக ஒட்டி
ஒவ்வோர் ஆட்டிடமும் தனிக்கவனம் செலுத்திடுவேன் 1
தொறட்டியின் துணைகொண்டு, ஆடுகளின் பசிதீர்க்க
மரங்களுக்குச் சேதமின்றி தழையொடித்துத் தந்திடுவேன்!
இளம்புற்களை பசியோடு மேய்கின்ற ஆடுகளின்
இருப்பினை உறுதி செய்வேன்! குரலெழுப்ப
தூரத்தில் இருக்கின்ற ஆடுகளும் ஓடிவரும்!
நஞ்சான செடிகொடிகள் எதையும் தின்னாமல்
துஞ்சாமல் கவனித்தல் அவசியம் இத்தொழிலில்!
கண்ணுக்கு இமைபோல ஆடுகளைக் காத்து
எண்ணிக்கைக் குறையாமல் கொண்டுவந்து சேர்த்திடுவேன்!
என்னுடைய திறன்மேல் நம்பிக்கை கொண்டவர்கள்
நல்லமேய்ப்பன் நானென்று ஒப்படைத்தார் ஆடுகளை!
கண்மூடித் தனமாக பின்தொடர்ந்து செல்வோரை
ஆட்டுமந்தைக் கூட்டமென அழைக்கின்றார் இவ்வுலகில்!
கசாப்புக் கடைதோறும் கட்டிவைத் திருக்கின்ற
பலியாடுகளைக் காண்கையிலே பதைத்திடுமே என்நெஞ்சம்!
ஆடுகளை மேய்ப்பதே அவ்வளவு எளிதல்ல!
நாட்டினை ஆள்வதற்கு நற்றிறன் வேண்டுமன்றோ?
நாட்டை ஆள்பவர்கள் நல்லோராய்த் திகழ்ந்தால்தான்
ஆட்சி சிறந்திருக்கும்! நாடும் உயர்வடையும்!
திறன்மிக்க நல்லோரைத் தேர்ந்தெடுக்க தேர்தலிலே
உரிமையை நிலைநாட்டி வாக்களித்தல் அவசியமே!
படிப்பறிவும் பட்டறிவும் கொண்டிருக்கும் நல்லோரை
நாடாளத் தேர்ந்தெடுத்தால் நம்நாடு நலம்பெறுமே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# ஹைக்கூ கவிதைகள்

புதிய நாட்காட்டி
பார்க்கத் தூண்டி விடும்
விடுமுறை நாட்கள்
□
தேயிலைச் செடிகள்
பசுமையைப் பேணிக் கொடுக்கும்
காட்டுச் செடிகள்
□
உரசும் பசு
அன்பை வெளிப்படுத்தி விடும்
தாயிடம் குழந்தை
□
விற்ற பூக்கள்
இன்னும் மணம் வீசியவாறு
பூக்கூடைகள்
□
வற்றிய குளம்
நடைபாதையை மறைத்து விடும்
பெய்யும் மழை
□
வரப்போரத்தில் கொக்கு
தெளிந்த நீரில் தெரிகிறது
பெரிய மீன்
□
மழைச்சாரல்
புல்வெளியை ஈரப்படுத்துகிறது
குளிர் நிலவு
□
மழலை முகம்
கவலைகளைப் போக்கிடச்செய்யும்
அம்மாவின் தாலாட்டு



ஆற்றுப் படுக்கை
குளிர்ச்சியை ஏற்படுத்திவிடும்
மரத்தின் நிழல்
□
பேருந்தில் பாடகன்
பாடிய பின்பு கேட்கிறான்
வாழ்வாதாரம்

*கவிஞர் சே.ரா. ஸ்ரீதரன், இலங்கை*

# கைபேசி குழந்தைகளுக்கு தேவையா?



இன்றைய பெற்றோர்களின் நிலை
குழந்தைகள் கையில் மொபைல் என்னும் துயர மலை
அதிலிருந்து மீட்டு போராட வேண்டிய கவலை

எந்நேரமும் கையில் அலைப்பேசி
மீள முடியா துயராச்சி
ஆன்லைன் வகுப்பென்று - நம்மை
'ஆம்' போட வைக்கிறார்கள்.

பாடங்களை படித்தால் பரவாயில்லை!
பார்க்கக் கூடாதவை பார்த்தாலும்
கேட்கக் கூடாததை கேட்டலும் நடக்கிறதே

அன்றாட பழக்க வழக்கம் பாழாய் போனது
உணவு, தூக்கம் நேரமெல்லாம் மாறிவருகுது

கால நேர அவகாசம் கொடுத்து கைபேசியை கொடுக்கலாம்
கோயில், நூலகம், பார்க் என்று அழைத்துச் செல்லலாம்.
வீட்டிலுள்ள சின்ன வேலை செய்ய சொல்லலாம்.
பெற்றோர் எல்லாம் இதை உணர்ந்தால் நல்வழிப்படுத்தலாம்

*கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை*

# ஆகாயத்தில்

## சிறு நவீனம்

## அத்தியாயம்-7



"வாருங்கள்.. என்ன விசயம் ரொம்ப படபடப்போடு வருகிறீர்கள்.என்ன? கொரானாவுக்கு மருந்து எதுவும் கண்டுபிடித்து விட்டீர்களா?" சிவா சிரித்துக்கொண்டே கேட்டான்

எதிரே வந்த மெரீனா" சிவா உங்களுக்கு எல்லாமே கிண்டல் தான் எப்போதாவது சீரியசாக பேசியிருக்கிறீர்களா?" என்று கொஞ்சம் கோபத்தோடு கேட்டாள்.

" ஓ! இவ்வளவு கோபப்படுவீர்கள் என்று நினைக்கவில்லை" என்றவன் " எனிதிங் சீரியஸ்" மெதுவாகக்கேட்டான்

" ஆம் என் பின்னால் வருகிற அந்த ஆளைப் பாருங்கள். நான் லேபிலேயிருந்து கிளம்பி வந்ததிலிருந்து என்னைத்தொடர்ந்து வருகிறான்" என்றாள் மெரீனா.

"என்னது?" கோபத்தோடு திரும்ப, "உங்கள் கதா நாயகன் வேலையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு என்னோடு நடங்கள்" என்றாள் மெரீனா.

"நாம் இருவரும் சேர்ந்து இத்தனை நாள் ஒரே ஆராய்ச்சிக்கூடத்தில்வேலை செய்திருந்தும் கூட இவ்வளவு பயந்து கொண்டு" மெதுவாகச் சிரித்தவன் " மெரீனா இது உங்களுக்கே கொஞ்சம் அதிகமா படலியா?" என்றான் சிவா.

"நீங்கள் வீரர் தான். ஆனால் அதைக்காட்ட இது நேரமில்லை " மெரீனா காரை நோக்கி நடந்தாள்.

அவனும் காரில் ஏறி உட்கார, " ஆமாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டான்.

"விமான நிலையத்திற்கு" என்றாள் மெரீனா.

"ஆமாம் நாம் கொரோனாவிற்கு மருந்து கண்டு பிடித்தது தெரிந்து விட்டதா?" என்று கேட்டான் சிவா.

"அப்படித்தான் நினைக்கிறேன்" காரை மிகவும் வேகமாக ஓட்டினாள்.

திரு இராஜகைநிலவன்

சிறு நவீனம்

அத்தியாயம்-7

"நான் உடைகள் எதுவுமே எடுத்து வரவில்லை..."என்றான் சிவா. "என்னை பத்திரமாக குவைத் விமானத்தில் ஏற்றி விடுவதற்காக தான் நீங்கள் ஏர்போர்ட்டிற்கு வருகிறீர்கள்" என்றாள் மெரீனா.

தொண்டர்களிடம் வாழ்த்து சொல்லி அனுப்பி விட்டு உதவியாளரிடம் "தினமும் அரசியல் சூழ்நிலையை தெரிந்து, தினமும் மூன்று முறை போன் பண்ணி எனக்கு எல்லாத்தையும் சொல்லணும்" பின்ன நமக்குப் பின்னாலே யாரெல்லாம் இன்னும் குழி பறிச்சி கிட்டிருக்காங்கிறதையும் தெரிவிக்க வேண்டும்" என்று உதவியாளனிடம் சொல்லிவிட்டு விமான நிலையத்திற்குள் நுழைத்தார் அமைச்சர் தமிழரசன் திடீரென்று செல்போன் அழைக்க எடுத்து "ஹலோ" என்றான்.
"என் ஞாபகம் இருக்குமில்லையா?" என்ற இந்துமதியின் குரல் கேட்டு "இந்து இது கொஞ்சம் அதிகம்" என்றான்.
"நம் இருவர் அன்புச் சின்னமான காதலும் கொஞ்சம் அதிகமான விஷயம் தானே?" என்று இந்துமதி சிணுங்க"
"ஓகே ஓகே நான் அப்புறமாக கூப்பிடுறேன். என்றவாறு எமிகிரேசன் பகுதிக்கு வந்தான் தமிழரசன்.
டாக்டர் சந்திரசேகரை ஸ்ட்ரெக்சரில் வைத்து தூக்கி வந்துகொண்டிருந்தனர். குமணராசன்தான் மாமியாருடன் உள்ளே வந்து அவர்களுடைய டிக்கெட்டுகளை சரிபார்த்துக் கொண்டு மற்ற நண்பர்களிடம் ஒரு சில இன்ஸ்ட்ரெக்ஷன் கொடுத்து செய்யச் சொன்னார்.
சில்வியா வெளியில் நின்று அம்மாவிற்கு கையசைப்பது போல வெளியே நின்று கையாட்டினாள். சகாயராஜும் கூடவே ஒட்டிக்கொண்டு நின்றான்.



...தொடரும்

திரு இரஜகைநிலவன்

## புத்தக வாசிப்பு — தன்முனை கவிதைத் தோப்பு




இயற்கையைத் தொட்டு, சமுதாய அவலங்கள், காதல், சேமிப்பு, தாய்மை என்று முதலும் முடிவும் ஆகிய பெண்மையில் தனது தன்முனைப்பை நிறைவு செய்தது அழகோ! அழகு! இனி கவிஞரிகளின் கவிக்களம் கூறும் கருத்துக்களத்தை என்னால் முடிந்த அலங்கார அணிந்துரையில் அலங்கரிக்க முயல்கிறேன்.

இரவு பெண் அலங்காரத்தில் நிலாப் பொட்டு, இயற்கையை விவரிப்பதே அகமகிழ்ச்சி. மனிதேய இலக்கணம் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் தன்னினம் மட்டுமல்ல, தரணியில் அனைத்துயிர்க்கும் என்று பாரதியைப் போல் *காக்கைக் குருவி எங்கள் சாதி* குருவிக்கு உணவு அளிக்கும் *நேயம்* . இன்பத்திலே பெரிய இன்பம் இருப்பதில் கொடுப்பது; பேரின்பம் இருப்பதையேக் கொடுப்பது கருணையின் இலக்கணமாய் வாழ்ந்த அன்னை தெராசாவை கண்முன் காட்டி கலங்கவைக்கும் நெகிச்சியாக உள்ளது. வெற்றிக்கான வழிமுறையாக முயற்சியும் திட்டமும் என்று எடுத்துரைக்கும் போது நமக்குள் பல ஆலோசனைக் கூட்டத்தின் சாராம்சம் என்றே கருதலாம்.

சேமிப்பு என்னும் எதிர்கால வைப்பு நிதி பாதிப்பு இல்லாம் வாழலாம். *இயலாத நாட்களில் இன்பமாய் வாழலாம்* என்கிறார். இலக்கைக் குறிவைத்து இன்னொரு உலகைத் தொடவைக்க துணிவு தான் மாபெரும் ஆயுதம்.

கொடுமையிலும் கொடுமை தனிமை. அதனைக் கூட *தனிப்பெரும் கொடுமை* என கவிஞர் சுட்டிக்காட்டுகிறார். உலகினில் பெரிது பெரிது தாய்மை என்று *ஔவையை* ப் போல் அரிது, பெரிது என பட்டியலிடுகிறார் கவிஞர்.

திருமதி மோ. கோமளாநேதாஜி

அறிவு என்னும் சுகமான சுமையைத் தாங்கிட புத்தகச் சுமையும், பசியால் நிரம்பிய என்னும் காலிக் வயிற்றை நிரப்ப குப்பை பாரத்தை சுமக்கும் இரண்டு வேறுபட்ட நிலைக்கு புதுவிளக்கம் தந்துள்ளது *இரு சுமை தாங்கிகள்*. கொஞ்சிப் பேசியே குழிக்குள் விழ வைப்பார் யார்? நயவஞ்சகர். இறந்தும் வாழ்கின்ற நிலைத்த புகழினர் *இறப்பின் சிறப்பு*. ஆண்டுக்காண்டு இடர்கள் பெருகினும் வாழ்த்தும் மரபு வீழவதில்லை, புத்தாண்டுக்கும் சேர்த்தே. தவம் என்பது யாருமற்ற வனத்தில், உணவு, நீர் தவிர்த்து இருப்பதில்லை. உண்டவர் வயிறு நிறையும் ஏப்ப சத்தமும், பரிமாறும் போது கரண்டிக்கும் குண்டானுக்குமான காதல் மொழியில் கூட தவம் செய்யலாம் அன்னதானம் வழங்கியே.

அள்ள அள்ள குறையாத அன்பு. வேற்றுமொழியைக் கற்பது வியாபாரம்; விழிகளின் வழியே வந்த காதல்; ஆரோக்கியத்தின் ஆதாரம் இயற்கை, பெண் என்னும் மலரை நாள்தோறும் பிய்த்தெடுத்து ஆண்டுக்கொருமுறை மகளிர் தினக் கொண்டாட்டம, மனித இனத்தின் மாபெரும் மகத்துவம் பெண் எனச் சுட்டும் போது, அதில் எவ்வளவு பெரிய உண்மை சாதாரணமாக கூறிவிட்டார் என்று சற்றே வியந்துதான் போனேன்.




கவிஞரின் கருத்துலகம் *சொல்லி அடிப்பதில் கில்லி* என்று நெத்தியடி பதிலடி வழங்குகிறார் தனது தன்முனைப்புக் கவிதையின் வாயிலாக. அவரின் இலக்கியப் பணி இமயம் வரை எட்டட்டும் என வாழ்த்த வயதின்றி இறைவனை வேண்டி மகிழ்கிறேன்.

திருமதி மோ. கோமளாநேதாஜி

# சௌந்தரா கைலாசம்

## கட்டுரை

### பிறப்பு, கல்வி:

திருச்சி மாவட்டம், செட்டிபாளையம் எனும் சிற்றூரில் பிப்ரவரி 28, 1927 அன்று சி. எஸ். சுந்தர கவுண்டர்-காளியம்மாள் இணையருக்கு மகளாகப் பிறந்தார். அவரது குடும்பம் தேசியப் பின்னணி கொண்டது. தாய்வழிப் பாட்டனார் ரத்தினசபாபதி கவுண்டர் ராஜாஜியின் நண்பர். ராஜாஜி திருச்செங்கோட்டில் உருவாக்கிய காந்தி ஆசிரமத்திற்கு நிலத்தைக் கொடையாகக் கொடுத்தவர். தாயார் காளியம்மாளும் ராஜாஜியின் மகள் லட்சுமியும் தோழியர். சௌந்தரா ஒன்பதாம் வகுப்புவரை மட்டுமே கல்வி பயின்றார். தந்தையிடம் தேவாரம், சிலப்பதிகாரம், பெரிய புராணம் போன்ற தமிழ் இலக்கிய நூல்களைக் கற்றார். தமிழைச் சொந்த முயற்சியில் படித்து மரபுச் செய்யுள்கள் பாடும் ஆற்றல் பெற்றார்.

### தனி வாழ்க்கை:

தனது 14-ஆவது வயதில் சௌந்திரா திரு. பி.எஸ். கைலாசத்தை மணந்து கொண்டார் . பி.எஸ்.கைலாசம் புகழ் பெற்ற வழக்கறிஞர் வி.எல்.எத்திராஜின் வழிகாட்டுதலின் கீழ் வழக்கறிஞராக வேலை பார்த்தார். பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றினார். சௌந்தரா கைலாசம் இணையருக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும். மகள் விமலா ராமலிங்கம் மகப்பேறு மருத்துவர்; நளினி சிதம்பரம் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரத்தின் மனைவி; பத்மினி சிவசுப்ரமணியம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்; மகன் சடயவேல் கைலாசம் முடநீக்கியல் மருத்துவர்.



### அமைப்புப்பணிகள்:

இந்து அறநிலையத் துறை, திரைப்படத் தணிக்கைக் குழு மற்றும் அகில இந்திய வானொலி ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகப் பொறுப்பு வகித்துள்ளார்.

திரு குமரா. தர்மசீலன், இதழாசிரியர்

# கட்டுரை

## இலக்கிய வாழ்க்கை:

பி.எஸ். கைலாசம் சௌந்தராவின் இலக்கிய நடவடிக்கைகளை ஊக்குவித்தார். சௌந்தரா பச்சையப்பன் கல்லூரியில் பல இலக்கிய கூட்டங்களில் கலந்து கொண்டார். ஒரு கவிதைப் போட்டியில் நீதிபதியாக செயல்பட்டு தன் முதலுரையை ஆற்றினார். அவ்வுரைக்குக் கிடைத்த வரவேற்பினால், மேலும் பல கல்லூரிகளில் உரையாற்ற அழைக்கப்பட்டார்.

சௌந்தரா கைலாசம் வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, அகவல், பல்வேறு சந்தங்கள் எனப்பல செய்யுள் வடிவங்களையும் இயற்றினார். இறை வணக்கப்பாடல்களும், தேசபக்திப் பாடல்களும் பாரதி முதலிய கவிஞர்களைப் போற்றும் பாடல்களையும், எழுதினார். 'அளவற்ற அருளாளர்' நபிகள் நாயகத்தைப் பற்றி அவர் எழுதிய நூல்.

## விருதுகள், பரிசுகள்:

பாவேந்தர் பாரதிதாசன் விருது ( தமிழ் வளர்ச்சித் துறை 1991)
தமிழக அரசின் பாரதி விருது (தமிழ் வளர்ச்சித் துறை 2007)

## இலக்கிய இடம்:

பெரும்பாலும் கடவுளர் துதியாகவும் மனிதரைப் போற்றுவதாகவும் இவர் பாடல்கள் அமைந்துள்ளன. இறைத்துதியில் எதுகை மோனையுடன் வர்ணனையும் தலபுராணங்களும் மரபார்ந்த வழிபாடும் வேண்டுதல்களும் மிகுந்துள்ளன. தமிழில் புதுக்கவிதை இயக்கம் உருவாகி மரபுக்கவிதை வழக்கொழிந்துகொண்டிருந்த காலகட்டத்தில் மரபுக்கவிதையை பொது ஊடகங்கள் வழியாக நிலைநிறுத்திய ஆளுமைகளில் ஒருவராக சௌந்தரா கைலாசம் மதிப்பிடப்படுகிறார்.

திரு குமார். தர்மசீலன், இதழாசிரியர்

**நூல்கள்:**

- சௌந்தரா கைலாசத்தின் கவிதைகள்
- கவிதை பூம்பொழில்
- எழுத்துக்கு வந்த ஏற்றம்
- உள்ளத்தில் நிறைந்த உத்தமர்கள்
- அளவற்ற அருளாளர்
- இறைவன் சோலை
- இதயப் பூவின் இதழ்கள்
- நெஞ்சில் விளைந்த நித்திலங்கள்
- சிந்தை வரைந்த சித்திரங்கள்

**மறைவு:**

சௌந்தரா கைலாசம் அக்டோபர் 15, 2010 அன்று காலமானார்.

"சுட்டதிரு நீறேடுத்து தொட்டகையில் வேலெடுத்து
தோகைமயில் மீதமர்ந்த சுந்தரம் - அந்தக்
கட்டழகு கொண்டதொரு கந்தவடி வேலவனைச்
சாற்றுவது ஆறேழுத்து மந்திரம்!"

-சௌந்தரா கைலாசம்



நாளை நமதே

# உன் மதிப்பை
# முடிவு செய்ய வேண்டியது
# நீ தான்
# உன்னை சுற்றி இருப்பவர்கள்
# அல்ல.

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com